*18*

# நிழல் மற்றும் பொருள்

## (10:1-18)

*எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் (5ம் அதிகாரத்தில் தொடங்கிய)[1] தமது விரிவான விவாதத்தை முடிக்கவும், அவர் இப்புத்தகத்தை முடிக்கும் புத்திமதிகூறுதல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றின் அடுத்த மூன்றரை அதிகாரங்களுக்குச் செல்லவும் ஏறக்குறையத் தயாரானார். அந்த நிறைவுப் பகுதிகளில் அவர், முன்பு கலந்துரையாடப் பட்டிருந்த இறையியல் கருத்துக்களை அவ்வப்போது விவரமாக எடுத்துரைத்தார். இருப்பினும் இந்தப் பாடத்தின் வசனப்பகுதியானது, கிறிஸ்து மற்றும் கிறிஸ்தவத்தின் மீதான அவரது "நிறைவு வார்த்தை" என்ற வகையில் முதன்மையாக நினைக்கப் படமுடியும். முந்திய வசனங்களின் வலியுறுத்தம் பலியின் மீது இருந்ததால், இவ்வசனப் பகுதி, கிறிஸ்துவின் பலியினுடைய மேன்மைத் தன்மையின்மீதான அவரது நிறைவு வார்த்தையாகவும் நினைக்கப்படலாம்.*

வேதவசனங்களின் இப்பகுதியானது, நிழலையும் நிஜத்தையும் நேரெதிராக ஒப்பிடுகிறது: "இப்படியிருக்க, நியாப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் *பொருளாயிராமல்,* அவைகளின் *நிழலாய்* மாத்திரம் இருக்கிறபடியால்" (10:1அ; என்னால் வலியுறுத்தப் படுகிறது). "நிழல்" என்பது (*skia* என்பதில்) இருந்து வந்ததாக இருக்கையில், "பொருள்" என்பது "உருவம்" என்பதற்கான வழக்கமான வார்த்தையான (*eikon* என்பதில்) இருந்து வந்துள்ளது. (மோசேயின் நியாயப்பிரமாணத்தில் மையங் கொண்டிருந்த) பழைய உடன்படிக்கை நிழலாக இருந்த வேளையில் (கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியான) புதிய உடன்படிக்கை உண்மைநிலையாக, "பொருளாக" உள்ளது, முதலில் நிழல் வந்தது, பின்பு உண்மைநிலை வந்தது (காண்க கலாத்தியர் 3:19, 24). நீங்கள் ஒரு கட்டிடத்தின் முன்பு நிற்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். கட்டிடத்தின் மூலைப்பகுதியை நோக்கி நடந்துவரும். யாரோ ஒருவரின் நிழலை நீங்கள் காணுகிறீர்கள், ஆனால் அவர் இன்னும் பார்வையில் படவில்லை. சற்று நேரத்தில் பார்வைக்குள் வரும் நபரை நீங்கள் காணுகிறீர்கள்.



*நிழலானது உண்மை நிலையுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது. அது, நெருங்கிவரும் தனிநபரின் அளவு மற்றும் உருவம் பற்றிய சிலவற்றை உங்களுக்குக் கூறுகிறது. ஒரு கருத்தில் இந்த நிழல் உங்களை உண்மை நிலைக்கு ஆயத்தப்படுத்துகிறது.*[2]

*எபிரெயர் 10ம் அதிகாரம், நிழல் மற்றும் உண்மைநிலை ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நேர்மாறான கருத்தைக் காண்பிக்கிறது. நாம் காணப்போகிறபடி, நிழலானது நல்ல விஷயங்களை வாக்களித்தது, அதே வேளையில் உண்மை நிலையானது நல்ல விஷயங்களை அளிக்கிறது (வசனம் 1).*

## *1. பல எதிர். ஒரு*

*நிழல் என்பது பல பலிகளைக் கொண்டிருந்தது (வசனங்கள் 1, 3, 11). உண்மை நிலையோ ஒரே ஒரு பலியை மாத்திரம் கொண்டுள்ளது (வசனங்கள் 12, 14).*

## *2. அடிக்கடி எதிர். ஒரேமுறை*

*நிழலின் பலிகள் ஆண்டுக்குப் பின் ஆண்டாக செலுத்தப்பட்டிருந்தன. உண்மைநிலையின் பலியோ ஒரேமுறை செலுத்தப்பட்டது (வசனம் 12).*

## *3. பூரணமற்றது எதிர். பூரணமானது*

*நிழலின் பலிகள், மனிதர்களைப் பூரணப்படுத்த இயலாதிருந்தன (வசனம் 1). உண்மை நிலையின் பலியோ தேவனுடைய கண்களில் மனிதர்களைப் பூரணப்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன (வசனம் 14).*

## *4. நினைவுகூருதல் எதிர். சுத்திகரித்தல்*

*நிழலின்பலிகள் மனிதர்களுக்குப் பாவத்தை நினைவூட்டின ஆனால் மனச்சாட்சியைச் சுத்திகரிக்க இயலாதவைகளாக இருந்தன (வசனங்கள் 2, 3). உண்மை நிலையின் பலியோ மனச்சாட்சியைச் சுத்திகரிக்கக் கூடியதாக உள்ளது (காண்க 9:14).*

## *5. முடியாது எதிர். முடியும்*

*நிழலின்பலிகள் பாவத்தை எடுத்துப்போடாது-எடுத்துப்போட முடியாது -இருந்தன (வசனங்கள் 4, 11). உண்மை நிலையின் பலியோ பாவத்தை எடுத்துபோடக் கூடியதாக -எடுத்துப் போடுவதாக- உள்ளது (வசனங்கள் 10, 12, 15-17).*

## *6. புறம்பானது எதிர். உள்ளானது*

*நிழலின் பலிகள் புறம்பான சடங்கை வலியுறுத்தின. உண்மை நிலையின் பலியோ இருதயத்தில் ஊக்குவிக்கப்படும் கீழ்ப்படிதல் மீது வலியுறுத்தம் இடுகிறது (வசனங்கள் 5-9).*

*4ம் வசனமானது, காளைகள் மற்றும் வெள்ளாடுகளின் இரத்தம் பாவத்தை நீக்கிப்போடச் சாத்தியமற்றதாக இருந்தது என்று குறிப்பிடுகிறது. அந்த சத்தியமானது சங்கீதம் 40:6-8ன் மேற்கோளுக்கு வழிநடத்துகிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஆகையால் [இயேசு] அவர் உலகத்தில்*

பிரவேசிக்கும்போது [இயேசுவின் அவதாரத்தைக் குறிக்கிறது] ... என்று சொன்னேன் என்றார்" என்று தொடங்கினார் (வசனம் 5அ). பின்பு 5 முதல் 7 வரையுள்ள வசனங்களில், செயல்விளைவில் இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூற்று என்ற வகையில், 40ம் சங்கீதம் மேற்கோள் காண்பிக்கப் படுகிறது. தாவீது 40ம் சங்கீதத்தை எழுதியபோது, அவர் தம்மைக்குறித்தே பேசினார்; ஆனால் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தாவீதைப் பற்றியும் அவரது வம்சவழியைப் பற்றியுமான தீர்க்கதரிசனங்களின் முடிவான நிறைவேற்றமாக இயேசுவைக் கண்டார்.

எபிரெயர் 10:5-7ல் எழுத்தாளர், சங்கீதம் 40:6-8ஐ மேற்கோள் காண்பித்த பின்பு, மேற்கோளின் முதல் பாகத்தை எபிரெயர் 10:8ல் பொழிப்புரையாகக் கூறினார். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி (தேவன் பிரியமாயிராத) பலிகள் செலுத்தப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார். பின்பு அவர், மிருகங்களின் மனப்பூர்வமற்ற பலிகளுக்கு நேரெதிரான வகையில் கிறிஸ்துவின் பலி *மனப்பூர்வமானதாக* இருந்தது என்று மீண்டும் வலியுறுத்துவதற்கு, சங்கீதம் 40:7, 8ஐ மேற்கோள் காண்பித்தார்.

இரு ஏற்பாடுகளையும் ஒருவர் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதே முடிவாக உள்ளது. முதல் ஏற்பாடு (பழைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்பட்ட தகனபலிகள்) தேவனைப் பிரியப் *படுத்தவில்லை*, எனவே அவைகள் தேவனைப் *பிரியப்படுத்துகிற* இரண்டாம் ஏற்பாட்டினால் (இயேசுவின் மனப்பூர்வமான பலியினால்) மாற்றப்பட்டன என்று நாம் காணுகிறோம். இருதயத்தால் உணரப்பட்ட, மனப்பூர்வமான கீழ்ப்படிதலே தேவன் ஏற்றுக்கொள்கிற ஒரே வகையான கீழ்ப்படிதலாக உள்ளது (காண்க ரோமர் 6:17, 18).

## 7. தோல்வி எதிர். வெற்றி

நிழலின் பலிகள் பரிசுத்தமாக்குதலின் நோக்கத்தை நிறைவேற்றவில்லை, அதே வேளையில் உண்மை நிலையின் பலி அதை நிறைவேற்றுகிறது (வசனங்கள் 10, 14). பரிசுத்தமாக்குதலை அல்லது பரிசுத்த தன்மையை உண்டாக்குதல் என்பது நியாயப்பிரமாணத்தினால் உரைக்கப்பட்ட ஒரு நோக்கமாக இருந்தது என்பது நேரெதிரான கருத்தாகும். எடுத்துக்காட்டாக, பரிசுத்த உடன்படிக்கையின்கீழ், பரிசுத்தமான மக்களுக்காக, பரிசுத்தமான இடத்தில், பரிசுத்தமான பலிகளைச் செலுத்துதல் என்பதே, லேவியராகமத்தில் விவரிக்கப்பட்ட பரிசுத்த ஆசாரியத்துவமாக இருந்தது. நிறைவாக, ஆசாரியர்களின் முயற்சிகள் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் குறைவுபட்டன.

இருப்பினும், "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் [கிறிஸ்தவர்கள்] பரிசுத்தமாக்கப்*பட்டிருக்கிறோம்*" (வசனம் 10அ; என்னால் வலியுறுத்தப் படுகிறது). இயேசு செலுத்திய பலி ஒரேதரமானதாக, ஒருக்காலும் திரும்பச் செய்யப்படாத நிகழ்வாக இருக்கும் காரணத்தினால், நாம் "ஒரேதரமாக" (வசனம் 10ஆ) பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறாம். அவரது பலி தனது நோக்கத்தை நிறைவேற்றியது - மற்றும் தொடர்ந்து அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

## *8. தற்காலிகமானது எதிர். என்றென்றைக்குமானது*

*நிழல் தற்காலிகமானதாக இருந்தது. உண்மை நிலையோ என்றென்றைக்குமானதாக உள்ளது (வசனங்கள் 9, 11-18).*

*ஆசாரியர்கள் தினந்தோறும் தங்கள் கடமைகளை நிறைவேற்றி நின்றனர் (வசனம் 11அ). (ஆசரிப்புக் கூடாரத்தில் இருக்கைகள் இருந்ததில்லை.) அவர்கள் எப்போதும் பணிமும்முரமாக இருந்தனர்; அவர்கள் திரும்பத் திரும்ப "ஒரேவிதமான பலிகளை" செலுத்தினர் (வசனம் 11ஆ). இதற்கு நேர்மாறாக, இயேசு "பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி"னார் பின்பு அவர் "என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்" (வசனம் 12; என்னால் வலியுறுத்தப் படுகிறது). அவரது பலி செலுத்தும் பணி செய்யப்பட்டிருந்தது.*

*எரேமியா 31:31-34ன் வாக்குத்தத்தம் (எபிரெயர் 10:15-17; காண்க 8:8-12), மன்னிப்பைக் கொண்டுவரும் இயேசுவின் பூரணமான பலியை முன்னெதிர் நோக்கியது. அந்த பலியானது செலுத்தப்பட்டு மன்னிப்பு சாத்தியமானதாக ஆக்கப் பட்டிருப்பதால், "இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே" (வசனம் 18). (இயேசுவின் பலி என்ற) "இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு" "முதலாவது" பலிசெலுத்தும் முறைமை (மிருக பலிகள்) நீக்கிப் போடப்பட்டுள்ளன - மற்றும் இதனால் நாம் சந்தோஷமாக இருப்பதில்லையா!*

## *முடிவுரை*

*இந்தப் பாடத்தின் முன்னுரை, நமது வசனப்பகுதி "கடைசி வார்த்தை" என்று குறிப்பிடப் படமுடியும் என்று குறிப்பிட்டிருந்தது. இந்த கடைசி வார்த்தை உங்களுடைய கடைசி வாய்ப்பாகவும் இருக்கக் கூடும். கிறிஸ்து, "தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும்" "தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து" இருக்கிறார் (வசனங்கள் 12, 13). அவர் திரும்பி வரும்போது இது நடைபெறும் (காண்க 1 கொரிந்தியர் 15:23-25). அவரது மறுவருகைக்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவின் பலியினுடைய உண்மை நிலையையும் இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ளாத வரையில் அவ்வாறு ஆயத்தமாக இருப்பதில்லை.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த விவாதம் (5:11-6:20 என்ற) ஒரு புத்திமதிகூறுதலின் பகுதியினால் சுருக்கமாக இடைமறிக்கப் பட்டிருந்தது. [2]கிரேக்கத் தத்துவத்தின் கல்வியாளர்கள், இந்த உருவகமானது பிளேட்டோவின் "குகையின் உருவகத்தில்" முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு எவ்வாறு ஒத்திருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகின்றனர்.*